## 1. <u>உளைச்சல் பொதி</u>

நினைவறை
நித்தம்
நிரம்பி
வழியும்.

எண்ணங்களின்
பிரவாகம்
நெற்றிக் கரைதனில்
அலைமோதி
கோடிடும்.

முகத்தினில்
கடுகடுப்புக் கப்பல்
நங்கூரமிடும்.

அருகருகில்
அமர்ந்திருப்பினும்
அந்நியப்பட்டிருப்போம்.

அவசரமென்ற
ஆழ்கடலில்
அன்றாடம்
மூழ்கி
மூர்ச்சையாவோம்.

இந்த
எம்.ஆர்.டி
இயந்திர பாம்பிற்குள்
இப்படி
சுமக்கின்றோம்...
உளைச்சல் பொதி !

**********************

## 2. <u>கதவடைப்பு !</u>

கதவு
அடைத்துவிடும்.

நான்கு
சுவருக்குள்
நாம்.

அவன்-
தன்
கைக்கடிகாரத்தின்
" தொலைந்த"
முள்ளைத்
தேடிக்கொண்டிருப்பான்.

இவள்-
தன்
நகக்கண்ணில்
தன்
கண்களை
புதைத்துக்கொண்டிருப்பாள்.

நானோ-
மற்றவர்கள்
கண்கள்மீது
என்
கண்கள்
புதைந்துவிடாது
இருப்பதில்
ஜாக்கிரதையாக
இருப்பேன்.

...

..கதவு
திறக்கும்.

கதவடைப்பு
செய்யப்பட்ட
மனிதநேயம் மட்டும்
மின்தூக்கிக்குள்
பத்திரமாக
இருக்கும் !

********************

## 3. <u>தொலைந்தேன் !</u>

கண்சிமிட்டும்
கணத்தில்
கனத்திடும்
கவித்துளி
ஒன்று.

கவித்துளியினை
கவிதையாக
கோர்த்தெடுக்க
கனாக்காணும்
கவியுள்ளம்
ஒன்று.

ஆனால்-

துளிர்த்திடும்
துளியினை
துண்டாடும்..
அன்றாட
அலுவல்கள்.

கவிதையில்
தொலையாது
வாழ்க்கையில்
தொலைந்தேன்!

***********************

## 4. ஜாம்பவான் !

எனக்குள்
இருக்கிறான்

கட்டுப்பாடுகளால்
கட்டப்பட்டவன்.

விழுமங்களால்
விழுங்கப்பட்டவன்.

எதிர்பார்ப்புகளால்
எத்தனிப்பவன்.

அன்புக்கு
அடிமையானவன்.

ஆர்ப்பரிப்புகளால்
அலைகழிக்கப்படுபவன்.

என்று எனக்குள்ளிருந்து
எழுவான் ?

என்ன
சாதிப்பான் ?

ஜாம்பவானின்
வரவுக்காக
காத்திருக்கிறேன்...

************************************

I

**5. விலங்கு !**

விழித்தெழும்
வேளையில்
விழித்துக்கொள்ளும்
விழிமூடா
விலங்கு.

விலங்கிட்டு
விழுங்கும்..
விலகி விலகி
விரைந்தோடினாலும்
வலைக்குள்
தள்ளும்.

சிற்றின்ப
விதைகளை
விதைக்கும்,
வதைக்கும்.
மனம்
பதைபதைக்கும்.

பேரின்பம்
நோக்கியே
பயணிக்கும்
என்னை,
எள்ளி நகையாடும்
துள்ளும்
கிள்ளும்
தள்ளும்
“பள்ளத்தில்!”

வழுக்கி
வழுக்கியே
வரம்பின்றி
விழுகின்றேன்.

……………………

**6. வியாக்கியானங்கள் !**

அணை
உடைத்து
அணைக்கவரும்
அன்பை
அணையாது
அஞ்ஞான அணை
கட்டிக்கொண்டு,

மெய்ஞானச் சுடரை
மறந்து
விஞ்ஞான
வியாக்கியானங்களில்
விழுந்து
அணைகின்ற
அறிவிலிகள் !

***************************************

I

**7. கோலங்கள் !**

நிற்காத
காலம்
வரைந்த
கோலம்
நான்.

கோலமா
அல்லது
அலங்கோலமா
என்பதை
காலமே
தீர்மானிக்கும்.

காலமாகும் முன்
காலத்தால்
கரையாத
கோலமாக
காலத்தை
கடந்து
வாழும்
காவியமாக
கறைபடியா
ஓவியமாக
கடவுளால்
கனிவேனாக !

**********************************